**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்.**

**பிறப்பிப்பவர்.செல்வி.எம்.மல்லிகா.**

**ந.க.எண்.5451/2020/ஊவ.5**

**நாள். 28.12.2022**

| | |
|---|---|
| **பொருள் :** | பணியமைப்பு–பணிவரன்முறை– நாகப்பட்டினம் மாவட்டம்– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு– 2020–2021 ஆம் ஆண்டு –10 சதவீத இடஒதுக்கீடு அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம்–சேகர்.(திரு).து–இளநிலை உதவியாளர்–ஊராட்சி ஒன்றியம் நாகப்பட்டினம்– பணிவரன்முறை செய்து–ஆணையிடல். |
| **பார்வை :** | 1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் , சென்னை–600003. கடித எண்.1416/சிடி/அ1/2022நாள்.29.08.2022<br>2) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) நாகப்பட்டினம், செயல்முறைகள். ந.க.எண்.5451/ஊ.வ.5/2020, நாள்.26.09.2022<br>3) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), நாகப்பட்டினம்.கடித எண்.ந.க.1430/2021/அ3, நாள்.26.12.2022<br>4) இதர தொடர்புடைய ஆவணங்கள். |

*********

**ஆணை:**

நாகப்பட்டினம் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் அலகில் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வரும் திரு.து.சேகர் என்பவருக்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கான 10 சதவீத இடஒதுக்கீடு அடிப்படையில் பணிமாற்றத்தின் மூலம் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு அளிக்க தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், பார்வை 1–இல் காணும் கடிதம் வாயிலாக இசைவு வழங்கியுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 2–இல் காணும் செயலாணையின்படி தனியருக்கு இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு, 01.11.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். தனியர் பணியில் சேர்ந்த நாளான 01.11.2022 முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தனியருக்கு, இளநிலை உதவியாளர் நிலையில் தகுதிகாண் பருவக்காலம் 01.11.2022 முற்பகல் முதல் தொடங்கும்.

28/12/2022

**மாவட்ட ஆட்சியரின்**
**நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),**
**நாகப்பட்டினம்.**

28/12/2022

**பெறுநர்:**
திரு.து.சேகர்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், நாகப்பட்டினம்.–உரிய வழியாக.

**நகல்**–வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கிஊ), நாகப்பட்டினம்.
**நகல்**–ஊ.வ.2 பிரிவு –இருப்பு கோப்பிற்கு தகவலுக்காக.
**நகல்**–ஊ.வ.5 பிரிவு –இருப்பு கோப்பிற்கு.